# சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டம், 2026

## தொகுப்பு I

# தொலை நோக்கு, வினைமுறைத்திறம் மற்றும் செயல் திட்டங்கள்

செப்டம்பர், 2008

(அரசாணை எண். 190, வீட்டுவசதி மற்றும் நகரப்புற வளர்ச்சித் துறை நாள் 2.9.2008ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசிதழ் எண். 266 பகுதி 2, பிரிவு 2 நாள் செப்டம்பர் 2, 2008ல் வெளியிடப்பட்டது).

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,**

தாளமுத்து - நடராசன் மாளிகை,

எண்.1, காந்தி இர்வின் சாலை, எழும்பூர், சென்னை - 600 008.

குறிப்பு:

இந்த தமிழ் மொழி பெயர்ப்பிற்கும், ஆங்கில மூலப்படிக்கும் ஏதேனும் வேறுபாடு இருந்தால், ஆங்கில மூலப்படியின் அர்த்தமே கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

# ஏற்றுக்கோடல்

முழுமைத் திட்டம் தயாரித்தலுக்கு மிகப்பெரிய அளவிலான திறன் மற்றும் முயற்சிகள் தேவை. முழுமைத் திட்டம் தயாரிப்பதற்கு பலதரப்பட்ட ஆதாரங்களிலிருந்து எண்ணற்ற புள்ளி விவரங்கள் தேவைப்படுவதால் இப்பயிற்சியை அது மிகவும் கடினமாக்குகின்றது. மேலும், பெரு நகர் முழுவதும் நேரிடையாகவும் எதிர்மறையாகவும் செயல் விளைவினை ஏற்படுத்தும் ஒரு சில ஆவணங்களில் முழுமைத் திட்டமும் ஒன்றாகும். அதில் பங்கீடுபாடு கொண்டோர் பரந்து மிகப்பெரிய அளவில் இருப்பதால், பொது கலந்தாய்வு முறைகள் மிகப் பெரிய அளவில் மிகுந்த அக்கறையுடன் நடத்த வேண்டியதாகவுள்ளது. இதே சமயத்தில் இக்கலந்தாய்வுகள் பயனுள்ளதாகவும் உள்ளது. இருந்த போதிலும் முழுமைத் திட்டம் தயாரிக்க எடுத்துக் கொண்ட நீடித்த நிலையான கூட்டு முயற்சி இத்திட்ட ஆவண தயாரிப்பின் மூலம் உச்சநிலையடைந்தது.

மாற்றியமைக்கப்பட்ட / புதியதாக இரண்டாவது முழுமைத் திட்டம் தயாரிக்கும் பணி கடந்த 2005 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. முந்தைய தலைவர்கள் மற்றும் தற்போதைய சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர் மற்றும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்களின் வழிகாட்டுதலும், தலைமை யேற்று வழி நடத்திச் சென்றதும் அளவற்றதாகும். மேலும், முந்நாள் மற்றும் இந்நாள் குழும உறுப்பினர்கள் இதற்காக ஆதரவும் மற்றும் வழங்கிய கலந்தாலோசனைகளும் இந்நேரத்தில் நினைவிற் கொள்வது பொருத்தமானதாகும்.

முழுமைத்திட்டம் உருவாக்கும் பணியின் மிகப்பெரிய தன்மை மற்றும் அதனுள் அடங்கிய சிக்கலான தகவல்கள், சரியான தலைமையேற்பு போன்றவை, கொடுக்கப்பட்ட நிலையில் மற்றும் முறையான வழி காட்டுதல்அளிப்பது சுலபமான பணி அல்ல. என்றாலும், ஓய்வு பெற்றுச் சென்ற துணைத்தலைவர் திரு.ஆர்.சந்தானம், இ.ஆ.ப. (நவம்பர் 2006–ஆம் ஆண்டிலிருந்து நவம்பர் 2007–ம் ஆண்டு வரை இருந்தவர்) மற்றும் அவர்களுக்கு முன்பிருந்த துணைத்தலைவர்களிடமிருந்தும் இம்முழுமைத்திட்டம் தயாரிக்கும் முயற்சிக்கு நல்லாதரவு கிடைக்கப் பெற்றது. அவ்வாறானவர்களில் குறிப்பிட்டு கூறுவதென்றால், திரு.எஸ்.ஏ. சுப்பிரமணி, இ.ஆ.ப. மற்றும் திருமதி ஜெயந்தி, இ.ஆ.ப. ஆகியோராவார்கள். மேலும், இப்பணிக்கு தற்போதைய உறுப்பினர்-செயலர் திரு.நசிமுதீன் இ.ஆ.ப அவர்களிடமிருந்து அன்றாட வழிகாட்டுதல் மற்றும் ஆதரவு பெறப்பட்டது ஒரு மிகப் பெரிய உதவியாக இருந்தது. அதே போல், திரு. பரூக்கி, இ.ஆ.ப., டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., திரு விபு நாயர், இ.ஆ.ப., திரு ராஜிவ் ரஞ்சன், இ.ஆ.ப., திரு ஜெயக்கொடி, இ.ஆ.ப., திரு.பி.ஆர்.சம்பத், இ.ஆ.ப., திரு.ஜி.சந்தானம், இ.ஆ.ப., மற்றும் திரு மாலிக் பெரோஸ்கான் இ.ஆ.ப., திரு ஆர்.என்.சௌபே, இ.ஆ.ப., ஆகிய முந்தைய உறுப்பினர் – செயலர்களிடமிருந்து, குறிப்பிடத்தக்க அளவில், பங்களிப்பு பெறப்பட்டது.

இந்த முழுமைத் திட்டம் தயாரிப்பதற்கு ஒரு வகையில் வரைவு முழுமைத் திட்டம்- 2011 வழிகோலாக அமைந்தது. அதனை தயாரித்தலில் கடந்த கால முதன்மைத் திட்ட அமைப்பாளர்கள் திரு டி.எல்.பிரகாசம், திரு.எ.தாமோதரன், திரு அனந்தரஞ்சனதாஸ், திரு ஏ.ஆர்.ரங்கநாதன் மற்றும் திரு என்.தர்மலிங்கம் போன்றோரின் பங்களிப்பை ஒப்புக் கொள்ளாவிட்டால் அது அழகற்ற செயலாகும்.

இத்திட்டமிடுதல் பணி பலதரப்பட்ட பிரிவுகளை உட்கொண்டிருப்பதால், அதற்குப் பெருமளவில், பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் / துறைகளிடமிருந்து, ஆதரவும் உடன்பட்ட செயலும் தேவைப்படுகிறது. இவ்வாவணத்தில், ஆங்காங்கே, உகந்த இடங்களில் இவர்களின் ஆதரவு / ஒத்துழைப்பு சம்பந்தமான ஏற்றுக்கோடல் குறிக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது முழுமைத் திட்டத்தை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் வலைதளத்தில் வெளியிட்டதாலும், 3000 பிரதிகளுக்கு மேல் அச்சிடப்பட்ட ஆவணங்கள்

விற்கப்பட்டதாலும் மற்றும் 4 மாதங்களுக்கு மேல் பொது கலந்தாலோசனை கூட்டங்கள், சென்னைப் பெருநகரில் நடத்தப்பட்டதாலும், பொது மக்கள் இத்திட்டத்தில் பங்கேற்க போதிய வாய்ப்பு கொடுக்கப்பட்டதாலும், மறுப்புகள், கருத்துக்கள் அடங்கிய 900 கடிதங்கள் பெறப்பட்டன. இது திட்ட ஆவணத்தின் குறிக்கோள் மற்றும் உட்பொருள் ஆழ்ந்ததாக்கிறது. ஊடகம், குறிப்பாக அச்சு ஊடகம், இத்திட்ட ஆவணத்தின் உள்ளடக்கத்தினை விவாதப் பொருளாக்கி அதன் மூலம் இவ்வாவணத்தின் தரம் மற்றும் பொதுமக்கள் பங்களிப்பு ஆகியவற்றினை மிகுதியாக்க வழிவகை செய்திருக்கின்றது. இந்த கருத்துகள் மற்றும் மறுப்புகளின் சிறந்த கூறுகளை மட்டும் கவனித்தெடுப்பது என்பது ஒரு மிகுந்த சிரத்தையான முயற்சி என்றாலும், தனியாரிடமிருந்தும் மற்றும் பங்கீடுபாடு கொண்டோரிடமிருந்து பெறப்பட்ட எண்ணற்ற கருத்துகளிலிருந்து, ஏற்கக்கூடிய கருத்துகளை சல்லடையாக பிரித்தெடுப்பது, ஒரு திருப்திகரமான அனுபவமாகும். மற்றும் ஒவ்வொரு பங்கேற்ப்பாளரிடமிருந்து பெறப்பட்ட கருத்துகள், ஒரு முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த முழுமைத் திட்டம் தயாரிப்பதில் உதவியதை நோக்கும் போது இது ஒரு திருப்திகரமான அனுபவமாக இருந்தது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகளை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட பல்வேறு குழுக்களின் பங்களிப்பு ஒரு குறிப்பிடத்தக்கது மட்டுமன்றி கொடுத்த வரையறைக்குள் இக்குழுக்கள் பணியாற்றியது பாராட்டத் தக்கது. இக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பங்கு இவ்வாவணத்தில் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. இதில், சென்னை உயர்நீதி மன்றத்தினால் நியமனம் செய்யப்பட்ட கண்காணிப்பு குழுவின் பங்கும் அடங்கும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற்பாடு செய்து நடைபெற்ற இரண்டு நாள் கருத்தரங்கில் பல்வேறு அரசு அதிகாரிகள், வல்லுநர்கள், பொறியாளர்கள், கட்டிடக்கலை நிபுணர்கள், மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட அரிய கருத்துகளும் மற்றும் ஆலோசனைகளும் இம்முழுமைத் திட்ட ஆவண உருவாக்கத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கு மிகவும் உதவிகரமாய் இருந்தது. தமிழக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில், அரசின் பல்வேறு துறைகளின் செயலாளர்கள் கலந்து கொண்ட கூட்டங்களில் நடைபெற்ற விவாதங்கள், இத்திட்டத்தின் கொள்கை மற்றும் பெருநகரின் எதிர்கால வளர்ச்சியின் போக்கு ஆகியவற்றை செம்மைப் படுத்தும் நோக்கத்திற்கு மிகவும் உதவிகரமாகவும், பயனுள்ளதாகவும் அமைந்தது.

திரு எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப. தலைமை செயலர் அளித்த வழிகாட்டுதலும் மற்றும் திரு ஆர்.செல்லமுத்து, இ.ஆ.ப., வீட்டு வசதித்துறை செயலர் அளித்த ஆதரவு நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

இறுதியாக, ஆனாலும் குறைத்து மதிப்பிட முடியாத அளவிற்கு, திரு.சி.பழனிவேலு தலைமைத்திட்ட அமைப்பாளர் அவர்களது தலைமையில், முழுமைத்திட்டப் பிரிவின் அனைத்துப் பணியாளர்கள் மற்றும் இணைந்து பணியாற்றிய இதர உறுப்பினர்கள் ஆகியோர்களை உள்ளடக்கிய பணிக்குழு மேற்கொண்ட அயராத முயற்சிகள், இம்முழுமைத்திட்டத்தின் உள்ளடக்கத்திலோ அல்லது அதன் தரத்திலோ எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி, மிகவும் கவனத்துடன், இத்திட்ட ஆவணம் உருவாக்கப்பட்டிருக்கின்றது என்பதை உறுதி செய்வதுடன், அதனைக் குறித்த கால அவகாசத்திற்குள் அனைத்து தடைகளையும் கடந்து, அரசிடம் சமர்ப்பித்திருக்கின்றது.

## உள்ளடக்கம்


| அத்தியாய எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| | சென்னையைப் பற்றி | i - ii |
| | அறிமுகம் | i - vii |
| 1 | முதல் முழுமைத் திட்டத்தைப் பற்றிய மறுஆய்வு | 1 |
| 2 | மக்கள் தொகை | 6 |
| 3 | பொருளாதாரம் | 13 |
| 4 | போக்குவரவு மற்றும் போக்குவரத்து | 25 |
| 5 | உறைவிடம் | 69 |
| 6 | உள்கட்டமைப்பு வசதிகள் | 77 |
| 7 | சமுதாய வசதிகள் | 91 |
| 8 | திடக்கழிவு மேலாண்மை | 98 |
| 9 | சென்னை பெருநகர் பகுதியில் பெரு வடிகால் அமைப்பு முறை | 102 |
| 10 | பேரிடர் மேலாண்மை | 106 |
| 11 | சுற்றுச் சூழல் | 109 |
| 12 | இடசார் செயல்முறைத் திறம் மற்றும் நிலப் பயன்பாடு | 115 |
| 13 | வளர்ச்சி விதிமுறைகள் | 123 |
| 14 | முழுமைத் திட்டத்தினை கண்காணித்தல் மற்றும் செயலாக்குதல் | 124 |

## அட்டவணைகளின் பட்டியல்


| எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 2.1 | சென்னைப் பெருநகர்ப் பகுதியில் மக்கள் தொகை வளர்ச்சி | 6 |
| 2.2 | சென்னை மாநகரில் குடியேற்றம் 1961-01 | 7 |
| 2.3 | சென்னை மாநகர பகுதியில் குடியேற்றம், 2001 | 8 |
| 2.4 | வளர்ச்சி விவரத் தொகுப்பு | 8 |
| 2.5 | சென்னை நகரிலும், சென்னைப் பெருநகரிலும் ஆண்-பெண் விகிதம் | 9 |
| 2.6 | சென்னைப் பெருநகரில் எழுத்தறிவு நிலைகள் | 9 |
| 2.7 | சென்னைப் பெருநகரில் வயது அமைப்பு நிலை | 10 |
| 2.8 | சென்னைப் பெருநகர் மற்றும் சென்னை நகருக்கான மக்கள் தொகை எதிர்கால கணக்கீடு | 11 |
| 3.1 | பங்களிப்பு வீதம் 1991 மற்றும் 2001 | 13 |
| 3.2 | மாநகரில் பணி அமைப்பு முறை | 14 |
| 3.3 | சென்னைப் பெருநகர்ப் பகுதி பணி அமைப்பு முறை | 14 |
| 3.4 | பணி அமைப்பு முறை சென்னைப் பெருநகர்ப் பகுதி 1991 மற்றும் 2001 | 15 |
| 3.5 | சென்னை, காஞ்சிபுரம் (திருவள்ளூர் மாவட்டம் உள்பட) அமைப்பு முறைப் பிரிவின் வேலை வாய்ப்பு | 16 |
| 3.6 | வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்கள் தொகை | 20 |
| 3.7 | சென்னைப் பெருநகரில் வேலை வாய்ப்பு 2026 | 21 |
| 4.1 | பொது போக்குவரத்து வசதிகள் மூலம் தினமும் மேற்கொள்ளப்படும் பிரயாணங்களின் கணக்கீடு | 33 |
| 5.1 | தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சிகளில் காணப்படும் குடிசை வாழ் மக்கள் தொகை | 70 |
| 5.2 | சென்னைப் பெருநகரப் பகுதியில் குடியிருப்பு தேவைகள் மற்றும் கிராக்கியின் மதிப்பீடு | 71 |
| 5.3 | சென்னைப் பெருநகரப் பகுதியில் புதிய குடியிருப்புகளின் மதிப்பீடு | 75 |
| 6.1 | சென்னைப் பெருநகர் பகுதியில் உள்ள நகராட்சிப் பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் ஆகி யவற்றின் தற்போதைய நிலை | 77 |
| 6.2 | சென்னை நகரில், சென்னை பெருநகர குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தால் விநியோகிக்கப்படும் நீரின் தரம் | 78 |
| 6.3 | தண்ணீர் கிடைக்கப் பெறும் நீர் ஆதாரங்கள் | 78 |
| 6.4 | பரந்த முறையிலான கழிவு நீர் சுத்திகரிப்பின் சிறப்பு அம்சங்கள் | 79 |
| 6.5 | சென்னைப் பெருநகர் பகுதிக்கு பல்வேறு பயன் பாடுகளுக்குத் தேவைப்படும் உத்தேச தண்ணீரின் அளவுகள் | 80 |

| | | |
|---|---|---|
| 6.6 | குடிநீர் கிடைக்கும் ஆதாரங்கள் மற்றும் கிடைக்கும் அளவுகள் | 81 |
| 6.7 | தண்ணீர் ஒதுக்கீடு 2026 - சென்னைப் பெருநகர் பகுதி | 83 |
| 6.8 | உத்தேசித்துள்ள புதிய துணை நிலையங்கள் | 85 |
| 7.1 | சென்னைப் பெருநகரப் பகுதியில் உள்ள மாவட்டங்களில், எழுத்தறிவு மற்றும் கல்வி தொடர்பான உள்கட்டமைப்புகள் | 91 |
| 7.2 | தேவைப்படும் பள்ளிகளின் எண்ணிக்கை (2026) | 92 |
| 7.3 | சென்னைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை | 95 |
| 8.1 | சென்னைப் பெருநகர்ப் பகுதியில் தினமும் வெளியேற்றப்படும் திடக்கழிவு | 98 |
| 12.1 | தற்போதைய நிலப்பயன்பாடு 2006 | 118 |
| 12.2 | உத்தேச நிலப் பயன்பாடு – 2026 | 119 |


## வரைபடங்களின் பட்டியல்


| எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 2.1 | சென்னைப் பெருநகர்ப் பகுதியில் மக்கள் தொகை வளர்ச்சி 1971 – 2001 | 6 |
| 2.2 | சென்னை நகரத்தின் குடியேற்றம் 1961-2001 | 8 |
| 3.1 | பங்கீட்டு விகிதம் 1991 மற்றும் 2001 | 13 |
| 3.2 | மாநகரில் பணி அமைப்பு முறை | 14 |
| 3.3 | சென்னைப் பெருநகர்ப் பகுதி பணி அமைப்பு முறை | 15 |
| 3.4 | மொத்த ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சென்னை துறைமுகம் | 19 |
| 3.5 | சென்னை விமான நிலையத்தில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரவுகள் | 19 |
| 4.1 | சென்னை நகரிலுள்ள வாகனத்தின் எண்ணிக்கை பங்கீடு (1.01.2007 நிலவரப்படி) | 27 |
| 4.2 | வாகன வகை பங்கீடு 1984 | 27 |
| 4.3 | வாகன வகைப் பங்கீடு – 1992 | 27 |
| 4.4 | வாகன வகைப் பங்கீடு – 2007 | 28 |
| 4.5 | நபர்களின் வழிமுறைப்படி பயணங்களின் பங்கீட்டு விவரப் படம் – 1970 | 28 |
| 4.6 | நபர்களின் வழிமுறைப்படி பயணங்களின் பங்கீட்டு விவரப் படம் – 1992 | 29 |
| 4.7 | நபர்களின் வழிமுறைப்படி பயணங்களின் பங்கீட்டு விவரப் படம் – 2005 | 29 |
| 4.8 | சென்னை நகரத்தில் சாலை விபத்துக்களின் போக்கு | 32 |

## சென்னையைப் பற்றி

வங்கக் கடலின் கடற்கரையில் அமைந்து இருக்கும் சென்னை தமிழ்நாட்டின் தலைநகராகவும் இந்தியாவில் நான்காவது பெருநகரமாகவும் திகழ்கிறது. மதராஸ் என்றிருந்த இதன் பழைய பெயர் அதிகாரப் பூர்வமாக **1996** ல் சென்னை என்று மாற்றப்பட்டுள்ளது.

**2.** சென்னை மாநகரம் தென்னிந்தியாவின் கோரமண்டலக் கடற்கரையில் ($12^o$ 50' 49" அட்சரேகை முதல் $13^o$ 17' 24" அட்ச ரேகை வரை. $79^o$ 59' 53" தீர்க்க ரேகை முதல் $80^o$ 20' 12" தீர்க்க ரேகை வரை ) அமைந்துள்ளது. இதன் நில அமைப்பு கடற்கரைச் சார்ந்த தட்டையான சமவெளியாக உள்ளது. சென்னை மாநகரில் கொசஸ்தலையாா், கூவம் மற்றும் அடையாறு ஆகிய மூன்று ஆறுகள் ஓடுகின்றன. இவைகள் கடலுக்குச் செல்லும் வழியில் வளைந்து வளைந்து மெதுவாக அமைதியாகச் செல்கின்றன. மேலும் செயற்கையாக வெட்டப்பட்ட பக்கிங்ஹாம் கால்வாய் ஒரு நீண்ட நீர்வழியாக உள்ளது. இக்கால்வாய் சென்னை மாநகருக்குள் தெற்கு வடக்காக ஓடுகிறது. சோழாவரம் ஏரி, செங்குன்றம் ஏரி மற்றும் செம்பரம்பாக்கம் ஏரி ஆகியவைகள் இப்குதியிலுள்ள மிகப் பெரிய ஏரிகளாகும்.

**3.** சென்னை பூமத்திய ரேகையின் வெப்பமண்டலப் பகுதியில் அமைந்துள்ளது. வருடத்தின் பெரும்பான்மையான காலம் வெப்பமாகவும் இலேசான ஈரப்பதத்துடன் கூடியதாகவும் தட்ப வெப்ப நிலை நிலவுகிறது. இங்கு மே மற்றும் ஜுன் மாதங்களில் சில நாட்கள் உச்சகட்ட வெப்பமாக $40^o$ C ($104^o$ F) இருக்கும். ஜனவரி மாதத்தின் முற்பகுதியில் மட்டும் குளிர் இருக்கும். இந்த மாதத்தில் இதன் வெப்பநிலை $20^o$ C ($68^o$ F) ஆக இருக்கும். பெரும்பாலும் தென் கிழக்கிலிருந்து வடமேற்கை நோக்கி காற்று வீசும்.

**4.** சென்னைப் பெருநகர் பகுதி என்பது சென்னை மாநகராட்சி (சென்னை மாவட்டம்), **16** நகராட்சிகள், **20** பேரூராட்சிகள் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களின் **214** கிராமங்களைக் கொண்ட **10** ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இதன் பரப்பளவு **1189** சதுர கி.மீ. ஆகும்.

**5.** சென்னையில் வாழும் பெரும்பான்மையான மக்கள் தமிழ் பேசுகின்றனர். கணிசமான அளவில் தெலுங்கு பேசும் மக்களும் உள்ளனர். முன்பு மதராஸ் (தற்போது சென்னை) தமிழ்நாடு, ஆந்திரா கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களடங்கிய ‘மதராஸ் மாகாணத்தின்’ தலைநகராய் விளங்கியது. தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளும் இங்கு பேசப்படுகின்றன. சுதந்திரத்திற்குப் பின்னர் வட இந்திய மாநிலங்களான இராஜஸ்தான், குஜராத் மற்றும் பஞ்சாபிலிருந்து மக்கள் இங்கு வந்து குடியேறி நிரந்தரமாகிவிட்டதால் சென்னை பலதரப்பட்ட நாகரிகங்கள் படிப்படியாக உருவாகும் நகரமாகிவிட்டது. பிரம்ம ஞானசபை மற்றும் நடனம் மற்றும் இசைப் பள்ளியான கலா சேத்திராவும் தென் சென்னையில் அமைந்திருக்கின்றன. இவைகள் சில வெளி நாட்டவர்களைப் பெரிதும் கவர்ந்து இங்கேயே குடியேறும்படி செய்துள்ளன. தற்போது இங்கு வேகமான வளர்ந்து வரும் தகவல் தொழிலகங்கள் பல தரப்பட்ட மக்களை பல மாநிலங்களிலிருந்தும் அயல் நாடுகளிலிருந்தும் கவர்ந்திழுக்கின்றன.

**6.** சென்னை , புராதன நடனமான பரதநாட்டியத்திற்கு மிகவும் புகழ் பெற்றது. இங்கு டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் கர்நாடக சங்கீத இசை விழாக்கள் நடைபெறும். இது உலகில் நடைபெறுகின்ற நீண்ட கலாச்சார நிகழ்ச்சிகளில் ஒன்றாக திகழ்கிறது. இந்தியாவின் பல பாகங்களிலிருந்து மட்டுமின்றி உலகின் பல பகுதிகளிலிருந்தும் அனேக மக்கள் இதனால் கவர்ந்திழுக்கப்படுகின்றனர்.

7. சென்னை பலதரப்பட்ட கட்டிடக்கலை அமைப்புகளைக் கொண்ட அழகிய கட்டிடங்களைக் கொண்ட மாநகரமாகும். இங்கு பழங்கால கோயில்கள் முதல் ஆங்கிலேயர் ஆதிக்க காலக் கட்டிடங்களும் நவீன கட்டிடங்களும் உள்ளன. ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட பெரும்பான்மையான கட்டிடங்கள் இந்தோ– சரசானிக் கட்டிடக் கலை வகையைச் சேர்ந்தவைகளாக உள்ளன.

8. சென்னை, நெடுஞ்சாலைகள், இரயில், விமானப் போக்குவரத்து மற்றும் கடல் மார்க்கத்திற்கு முக்கிய மையப் பகுதியாக உள்ளது. இந்நகரம் இதன் மூலம் உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலுள்ள பெரும்பான்மையான பெருநகரங்களை இணைக்கிறது.

9. மேலும் சென்னை, அதிகளவில் கல்லூரிகளும் ஆராய்ச்சி நிறுவனங்களும் நிறைந்த, இந்தியாவின் முக்கிய கல்வி மையங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

10.இவ்வாறு, சென்னை, தெற்கு ஆசியாவிலியே ஒரு முக்கிற மாநகரமாக தோன்றி வருகிறது.

# அறிமுகம்

நிலவிவரும் சந்தை சக்திகளை கையாண்டு, குடிமக்களின் பொது பயன் மற்றும் பொது மக்கள் நன்மையையும் மேம்படுத்துவதே நவீன நகரமைப்பு திட்டத்தின் நோக்கமாகும். நிலப்பயன்பாட்டு பகுப்பும் மற்றும் கட்டிட வழிமுறைகளை செயல்படுத்துவதும் இத்திட்டமிடுதலின் பிரதான கருவிகளில் ஒன்றாக அமைகின்றது. அதோடு, முழுமைத் திட்டமானது, நகரத்திற்கும் அல்லது பெருநகரப் பகுதிக்கு உண்டான இடம், சார்ந்த நில உபயோக பகுப்புகளையும் மற்றும் போக்குவரத்து தடங்களையும் முழுமையாக ஏற்படுத்தி தரவும் முயல்கின்றது. எனவே, தனியார் முதலீடுகளை பெற்று பொது நிறுவனங்கள் ஏற்றுச் செய்யும் திட்டங்களுக்கு ஒரு வழிகாட்டியாக முழுமைத் திட்டம் விளங்குகின்றது.

2. தமிழ்நாடு மாநிலத்தின் தலைநகரமான சென்னை பொருளாதாரம், சமுதாய மற்றும் கலாச்சார மேம்பாடுகள் ஆகியவற்றின் மையமாக உள்ளது. இந்தியாவின் நான்காவது பெரிய நகரமாகவும் உள்ளது. இது தற்போது மிகவும் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகின்ற நகரமாக உள்ளதால், முந்தைய கால மேம்பாடுகளையும், எதிர்கால தேவைகளையும் ஒன்றினைக்கும் ஒரு தேவையை ஏற்படுத்துகிறது. நகர்ப்புற வளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் பல்வேறு நிறுவனங்களிளையே ஒரு சமமான மற்றும் ஒன்றிணைந்த அணுகுமுறையே தற்போதைய தேவையாகும். பெருநகரத்தினை மேலும் சிறப்புடையதாகவும் உலகத்தரம் வாய்ந்ததாக உருவாக்கும் நோக்கத்தினை அடைவதற்கு, திட்டமிடுதலில், பங்கெடுப்பு, செயல்பாடுகளும் மற்றும் உள்ளாட்சி மன்ற அளவில் திட்டத்தினை அவ்வப்போது மறு ஆய்வு செய்து அமல்படுத்துவதும் சமஅளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

3. 1920ஆம் ஆண்டியிலேயே சென்னை மாகாண நகர வளர்ச்சித் திட்ட சட்டம் தயாரிக்கப் பட்டிருந்தாலும் மற்றும் சென்னை மாநகரில் அமையும் சிறுசிறு பகுதிகளுக்கு விரிவான நகர வளர்ச்சித் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், சென்னை மாநகருக்கோ அல்லது பெருநகரப் பகுதிக்கோ ஒரு முழுமையான திட்டம் உருவாக்கப்படவில்லை. 1971ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழ்நாடு நகர மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டச்சட்டம், சென்னை மாகாண நகர வளர்ச்சித் திட்டச் சட்டத்திற்கு மாற்றாக விளங்குகின்றது.

4. தமிழ்நாடு நகர்புற மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 9–ஊ யின் படி (தமிழ்நாடு சட்டம் 35–1972) சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழுமத்தின் செயல்பாடுகள் பின்வருமாறு. (அ) சென்னைப் பெருநகரத் திட்டத்திற்குட்பட்ட பகுதியை அளவை செய்தல் மற்றும் இந்த அளவீட்டின் அடிப்படையில் அறிக்கை தயார் செய்தல். (ஆ) சென்னைப் பெருநகரத் திட்டப்பகுதிக்கு ஏற்ப, ஒரு 'முழுமைத்திட்டம்' தயாரித்தல் அல்லது விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரித்தல் அல்லது ஒரு புதிய நகர வளர்ச்சித் திட்டம் தயாரித்தல். (இ) இந்த வளர்ச்சி திட்டங்களுக்கான தற்போதைய நிலப் பயன்பாடு பற்றிய வரைபடம் தயாரித்தல் மற்றும் மற்ற வரைபடங்களைத் தயாரித்தல். (ஈ) வளர்ச்சித் திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள பணிகளுக்கான ஆயத்த நடவடிக்கை தேவைகள் (உ) சென்னைப் பெருநகரத் திட்டப் பகுதியில் அமைந்துள்ள மொத்தப் பகுதியையோ அல்லது அதன் ஆளுகைக்குட்பட்ட ஏதேனும் ஒரு பகுதியையோ புதிய நகரமாக அறிவித்து கீழ்க்கண்ட செயல்பாடுகள் செயல்படுத்தல்: (i) அந்தக் குறிப்பிட்ட பகுதிக்கான புதிய நகர வளர்ச்சித் திட்டத்தைத் தயாரித்தல். (ii) இப்புதிய நகர வளர்ச்சித் திட்டத்திற்கு ஏற்ப, நகரமைப்பு வளர்ச்சி மற்றும் மனைத்திட்ட அமைப்புகளை உறுதி செய்தல். (ஊ) மேலும் இது சம்பந்தமாக அரசு ஒப்படைக்கும் பணிகளைச் செயல்படுத்தல்.

5. முழுமைத் திட்டம் என்பது ஒரு பொதுவான அடிப்படையுடைய திட்டமாகும். அவை அன்றாட நிகழ்வுகள் அடங்கிய திட்டமாக விளங்கும் என கருத முடியாது. இம்முழுமைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு, விரிவான பகுதித் திட்டங்கள் மற்றும் திட்ட நடைமுறைகள் மற்றும் செயலாக்க வழிமுறைகள் உருவாக்கப்பட்டு, அதற்குண்டான உகந்த நிறுவனங்கள்/துறைகளினால் அமுல்படுத்தப்பட வேண்டும்.

தமிழ்நாடு நகர்புற மற்றும் ஊரக சட்டப் பிரிவு 17 (2) ன் கீழ், முழுமைத் திட்டம் கீழ்கண்ட அனைத்தையும் அல்லது ஏதாவது ஒன்றை உத்தேசிக்கலாம் அல்லது அமைக்கலாம்.(அ) இந்த திட்ட பகுதியிலுள்ள நிலங்கள் எவ்வாறு பயன்படுத்தப் பட வேண்டும் என்பது குறித்து (ஆ) நிலங்களை குடியிருப்பு பகுதி, வணிகப்பகுதி தொழிற்சாலைப் பகுதி மற்றும் விவசாயப் பகுதி, பூங்காக்கள், விளையாட்டுத்திடல்கள் மற்றும் திறந்த வெளிப் பகுதி என ஒதுக்கீடு செய்தல்: (இ) பொதுக் கட்டிடங்கள், பொது நிறுவனங்கள் மற்றும் நகர வசதிகளுக்காக நிலங்களை ஒதுக்கீடு செய்தல்: (ஈ) தேசீய நெடுஞ்சாலைகள், பிரதானச் சாலைகள், வட்டச் சாலைகள், முக்கிய வீதிகள், போக்குவரத்து தொடர்புகளுக்கான தடங்கள் குறிப்பாக இரயில்வே, விமான நிலையங்கள் மற்றும் கால்வாய்கள் போன்றவற்றிற்கான ஏற்பாடுகள்: (உ) போக்குவரத்து வகைகள் மற்றும் போக்குவரத்து சுற்றோட்ட அமைப்பு: (ஊ) முக்கிய வீதிகள் மற்றும் முக்கிய சாலைகளின் அபிவிருத்திகள்; (எ) எதிர்கால வளர்ச்சிக்கும், விரிவாக்கத்திற்கும் , மற்றும் புதிய குடியிருப்புகளுக்கான பகுதிகளை ஒதுக்கீடு செய்தல்; (ஏ) மோசமான மனைப்பிரிவுகள், உபயோகமற்ற கட்டுமானங்கள் மற்றும் குடிசைப்பகுதிகள் மற்றும் மக்களை வேறு இடத்தில் குடியமர்த்தல் ஆகியவற்றிற்கு வகை செய்தல் (ஐ) வசதிகள், சேவைகள் மற்றும் பயன்பாடுகள் (ஒ) குறிப்பிட்ட பகுதிகளில், குடியிருப்பு ,கடைகள், தொழிற்சாலைகள் மற்றும் நகர நல வாழ்வு, கல்வி மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றின் விரிவான வளர்ச்சிக்கு ஏற்பாடு; (ஓ)கட்டிடங்களின் முகப்பு தோற்றம் மற்றும் அமைப்பு ஆகியவற்றை கட்டுப்படுத்துதல். (ஔ) பகுதிகளை ஒழுங்குமுறைப் படுத்துதல், அதன் இருப்பிடம், உயரம், கட்டப்படும் கட்டிடத் தளங்களின் எண்ணிக்கை, கட்டிடத்தின் அளவு, மற்ற அமைப்புகள், முற்றத்தின் அளவு, ஏனைய திறந்த வெளிகள், கட்டிடத்தின் பயன்பாடு, அமைப்பு மற்றும் நிலப்பயன்பாடு ஆகியவற்றிக்கான நெறிமுறைகள் (அஅ) படிப்படியாக செயல்படுத்தப் பட வேண்டிய முழுமைத் திட்டத்தின் நிலைகள் (அஆ) குறிப்பிடப்பட்ட, இதர பல விவரங்கள்.

**6.** இந்திய அரசின் 74 வது அரசியல் திருத்தச்சட்டம் ஒவ்வொரு பெருநகரப் பகுதியிலும் பெருநகர அமைப்புத் திட்டக்குழு அமைக்கப் பட வேண்டிய அவசியத்தை கூறியிருக்கிறது. இது நகராட்சிகளின் அதிகாரம், ஆணையுரிமை மற்றும் பொறுப்புகளை மீண்டும் வலியுறுத்துவதாக உள்ளது. இந்த அரசியல் சட்ட திருத்தத்தின்படி மாநில சட்டமன்றம் கீழ்க்கண்டவைகளை அளிக்கலாம். (அ) நகராட்சிகள் தன்னாட்சி நிறுவனங்களாக செயல்பட, தேவையான தக்க அதிகாரங்களையும் ஆணையுரிமைகளையும் வழங்கி, சாத்தியமாக்கவும், மேலும், கடைபிடிக்க வேண்டிய நிபந்தனைகளுக்குட்பட்டு அதிகாரம் மற்றும் பொறுப்புரிமை ஒப்படைப்பு செய்யவும், கீழ் கண்ட வைகளுக்கு ஏதுவாக்கப்பட்டுள்ளது; (i) பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக நீதிக்கும் திட்டங்களைத் தயாரித்தல். (ii) 12 ம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களோடு, இவைகளுக்கு அளிக்கப்பட்ட பணிகளின் செயல் இயக்கம் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், (ஆ) 12 ம் அட்டவணையில் குறிக்க்ப்பட்டுள்ள செயல்கள் உள்ளிட்ட பொறுப்புகளை நிறைவேற்ற அதிகாரமும், ஆணையுரிமையும் கொண்ட குழுக்கள்.

7. மேலும் இந்த அரசியல் திருத்தசட்டம் (பெருநகர் அமைப்புத்திட்டக்குழு MPC) வளர்ச்சித் திட்ட வரைவை, தயாரிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டியவற்றையும் தெரிவிக்கிறது. அவையாவன: (i) பெருநகர்ப் பகுதியில் நகராட்சி மற்றும் ஊராட்சிகளால் தயாரிக்கப்பட்ட திட்டங்கள். (ii) பகுதிக்கான ஒருங்கிணைந்த இடஞ்சார்ந்த திட்டங்கள், தண்ணீர், மற்றும் இயற்கை வள ஆதாரங்களின் பகிர்வு, ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்றவற்றை உள்ளடக்கிய நகராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்குமிடையேயுள்ள பல பொதுவான அக்கறையுள்ள பொருள்கள் (iii) இந்திய அரசும் மற்றும் மாநில அரசும் ஏற்படுத்தியுள்ள நெறிமுறைகள் மற்றம் முன்னுரிமைகள். (iv) இந்திய அரசு மற்றும் மாநில அரசு நிறுவனங்கள் நிதியாகவோ அல்லது மற்றவகைகளாகவோ பெருநகர் பகுதியில் செய்யப்படவிருக்கும் முதலீடுகளின் அளவு மற்றும் தன்மை.

**8.** தமிழ்நாடு அரசின் நகர்புற மற்றும் ஊரமைப்பு திட்டச்சட்டத்தை திருத்தி பெருநகரத் திட்டக் குழு அமைப்பு ஏற்ப்படுத்துவது தொடர்பாக செயற்குறிப்பு தமிழக அரசின் தீவிரப் பரிசீலணையில் உள்ளது. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தில் கண்டுள்ளபடி தங்கள் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளுக்கான சமூக நீதி மற்றும்

வருடாந்தர பொருளாதார வளர்ச்சித்திட்டங்களை ஊராட்சி அமைப்புகளே தயாரிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. மாநகராட்சிகளும் நகராட்சிகளும் தங்களின் முதலீடுகளுக்காக வருடாந்தர மற்றும் ஐந்தாண்டு திட்டங்களை தயாரித்துக் கொள்ளுமென எதிப்பார்க்கப்படுகிறது. பெருநகர் திட்டக்குழு 20–25 ஆண்டுகளுக்கு தேவைப்படும் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய தொலை நோக்குத் திட்டங்களை (perspective plans) ஐந்தாண்டுத் திட்டங்களுடனும் வருடாந்தர வரவு செலவுக் கணக்குகளுடனும் தயாரித்து, மாநில அரசுக்கு அனுப்பும். இந்த 74 வது அரசியல் அமைப்புச் சட்டதிருத்தத்தால் (CAA) ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலையில், பெருநகர தொலை நோக்குத் திட்டங்களை உருவாக்குதிலும் மறுஆய்வு செய்வதிலும் உதவ, பெருநகர் திட்டக்குழுவின் தலைமைச் செயலகமாக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் விளங்கும். பெருநகர் திட்டக் குழுவால் தயாரிக்கப்படும் இந்த திட்ட வரைவு, இது தமிழ்நாடு நகர்புற மற்றும் ஊரமைப்புத் திட்டச்சட்டம் பிரிவு 17 ன் படி தயாரிக்கப்படும் முழுமைத் திட்டத்திற்கு மாறுபட்டதாக இருக்கும். டில்லி வளர்ச்சிக் குழுமம், கடந்த பிப்பரவரி 2007இல், 2021ஆம் ஆண்டிற்கான டில்லி பெருநகரத்திற்கான முழுமைத்திட்டத்தினை அறிவிக்கை செய்துள்ளது. மும்பை பெருநகர மண்டல வளர்ச்சிக் குழுமம், 1995ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மும்பை–நகரத்திற்கான முழுமைத்திட்டத்தினை மறு தயாரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றது. கடந்த 2007ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 25ஆம் தேதி, பெங்களூர் வளர்ச்சிக் குழுமம், பெங்களூரு பெருநகரப் பகுதிக்கான முழுமைத்திட்டம் 2015தினை அறிவிக்கை செய்திருக்கின்றது.

**9.** 1973இல் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் என்ற ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டு, பெருநகர்ப் பகுதிக்கான முழுமைத்திட்டம் தயாரிக்கும் பணி 1973ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அது 1974ஆம் ஆண்டு சட்டத்திருத்தத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 22, 1974) ஒரு சட்டப்பூர்வமான அமைப்பாக ஆகியது. 1975ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் பகுதிக்கான அறிவிக்கை வெளியிடப்பட்டது. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான வரைவு முழுமைத்திட்டம் தமிழக அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 05–08–1975இல் தமிழக அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்டது. அவ்வாறு அறிவிக்கை செய்யப்பட்ட நாளிலிருந்து அபிவிருத்திகள், முழுமைத்திட்டத்தின்படியும் / வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிமுறைகளின்படியும் ஒழுங்கு படுத்தப்பட்டு வருகிறது. முதல் முழுமைத்திட்டம், அரசாணை எண். 2395 உள்ளாட்சி நிர்வாகத்துறை நாள் 04-12-1976ல் அரசினால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்டது. அவ்வாறு அமல்படுத்தப்பட்ட முதல் முழுமைத்திட்டம் பற்றிய ஓர் ஆய்வு அத்தியாயம் ஒன்றில் தரப்பட்டுள்ளது.

**10.** சென்னைப் பெருநகர்ப் பகுதியில், உள்கட்டமைப்பு வசதிகளை திட்டமிடுதல் மற்றும் அபிவிருத்தி செய்தலில் ஈடுபட்டு வரும் பிரதான நிறுவனங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

நிறுவனங்கள் பற்றிய விவரங்கள் மற்றும் அதன் பொறுப்புகள் :

| வரிசை எண் | நிறுவனங்கள் | பொறுப்புகள் | வரம்பு எல்லை |
|---|---|---|---|
| 1 | உள்ளாட்சி அமைப்புகள் சென்னை மாநகராட்சி | வரம்பு எல்லைப்பகுதியில் சாலை அமைத்தல், சாலை மேம்பாலங்கள், சுரங்க வழிப்பாலங்கள், சுரங்க நடைபாதைகள் ஆகியவற்றின் கட்டுமானங்களை மேற் கொள்ளுதல், தெரு விளக்குகள் அமைத்தல், திடக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் மேலாண்மை, சிறு வடிகால்கள் அமைத்தல், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல். | உள்ளாட்சி மன்றப் பகுதி எல்லைக்குள் |
| 2 | நகராட்சிகள் | வரம்பு எல்லைப்பகுதியில் சாலை அமைத்தல், சாலை மேம்பாலங்கள், சுரங்க வழிப்பாலங்கள், சுரங்க நடைபாதைகள் | உள்ளாட்சி மன்ற பகுதி எல்லைக்குள் |

| | | | |
|---|---|---|---|
| | | ஆகியவற்றின் கட்டுமானங்களை மேற் கொள்ளுதல், தெரு விளக்குகள் அமைத்தல், திடக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் மேலாண்மை, சிறு வடிகால்கள் அமைத்தல், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல். | |
| 3 | பேரூராட்சிகள் | வரம்பு எல்லைப்பகுதியில் சாலை அமைத்தல், சாலை மேம்பாலங்கள், சுரங்க வழிப்பாலங்கள், சுரங்க நடைபாதைகள் ஆகியவற்றின் கட்டுமானங்களை மேற் கொள்ளுதல், தெரு விளக்குகள் அமைத்தல், திடக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் மேலாண்மை, சிறு வடிகால்கள் அமைத்தல், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல். | உள்ளாட்சி மன்ற பகுதி எல்லைக்குள் |
| 4 | கிராம ஊராட்சிகள் | வரம்பு எல்லைப்பகுதியில் சாலை அமைத்தல், சாலை மேம்பாலங்கள், சுரங்க வழிப்பாலங்கள், சுரங்க நடைபாதைகள் ஆகியவற்றின் கட்டுமானங்களை மேற் கொள்ளுதல், தெரு விளக்குகள் அமைத்தல், திடக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் மேலாண்மை, சிறு வடிகால்கள் அமைத்தல், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல். | உள்ளாட்சி மன்ற பகுதி எல்லைக்குள் |
| i) | அரசு சார்ந்த நிறுவனங்கள்<br>தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் | தன்னிறைவு வீட்டு மனைத்திட்டம், மேம்படுத்தப்பட்ட வீட்டு மனைகள் மற்றும் குடிபுக தயார் நிலையில் உள்ள கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் ஆகியவை அடங்கிய குடியிருப்பு அபிவிருத்திகள் | தமிழ்நாடு மாநிலம் பிரதானமாக சென்னை பெருநகர்ப் பகுதியில் |
| ii) | மாநகரப் போக்குவரத்துக் கழகம் | பேருந்து போக்குவரவு வசதிகளை ஏற்படுத்தித் தருதல் | சென்னைப் பெருநகரம் |
| iii) | போக்குவரத்துக் காவல் துறை சென்னை) (பெருநகரம்) | போக்குவரவு மேலாண்மைத் திட்டங்கள் | பெருநகரச் சென்னை |
| iv) | தமிர்நாடு மின்சார வாரியம் | மின்சார உற்பத்தி மற்றும் வழங்கல் | தமிழ்நாடு மாநிலம் |
| v) | சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் | சென்னைப் பெருநகரப் பகுதியில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வசதிகளை செய்து தருதல் | சென்னைப் பெருநகர்ப் பகுதி * |
| vi) | தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் | குடிசைப் பகுதிகளில் வீட்டுவசதி, உள்கட்டமைப்பு வசதி மற்றும் வாழும் சூழ்நிலையை மேம்படுத்தும் திட்டங்கள் ஆகியவற்றினை செய்து தருதல் | தமிழ்நாடு மாநிலம் பிரதானமாக சென்னை பெருநகர்ப் பகுதியில் |
| vii) | நெடுஞ்சாலைத்துறை | சென்னை மாநகருக்குள் பிரதான சாலைகள், அனைத்துப் பேருந்து வழிச்சாலைகள் மற்றும் மாவட்டச் | தமிழ்நாடு மாநிலம் |

| | | | |
|---|---|---|---|
| | | சாலைகள் அமைத்தல், சாலை மேம்பாலங்கள், சுரங்கப் வழிப் பாலங்கள், சுரங்க நடைபாதைகள் போன்றவற்றினை கட்டுமானம் செய்தல். | |
| viii) | பொதுப்பணித்துறை | பெருவடிகால் அமைப்பினை அமல்படுத்தலும் மற்றும் பராமரித்தலும் | தமிழ்நாடு மாநிலம் |
| ix) | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | பெருநகரத் திட்டமிடுதல், திட்டங்களை செயல்படுத்துவதில் ஒருங்கிணைப்பு | சென்னைப் பெருநகர்ப் பகுதி |

* சட்டப்படி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் வரம்பு எல்லை சென்னைப் பெருநகர்ப் பகுதி முழுவதும் விரிந்திருந்தாலும், அதன் செயல்பாடுகள் தற்போது, சென்னை மாநகராட்சி எல்லை மற்றும் முகப்பேர், தகவல் தொழில்நுட்ப வழிப்பாதை போன்ற அதனை அடுத்துள்ள ஒரு சில பகுதிகள் வரை மட்டுமே உள்ளது.

**11.** இந்தக் குழுமம் சென்னைப் பெருநகர பகுதிக்குள் அடங்கிய நகர்ப்புறம் மற்றும் ஊரக உள்ளாட்சி நிறுவனங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளையும் அங்கமாகக் கொண்டுள்ளது. முழுமைத்திட்டம் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்படும் போது, உள்ளாட்சி நிறுவனங்களிடம் முறையாக கலந்து ஆலோசிக்கப்பட்டு அவைகளின் கருத்துக்களும் பரிந்துரைகளும் கருத்தில் கொள்ளப்படுகிறது மற்றும் இத்திட்டங்களின் தயாரிப்பில் உள்ளாட்சி நிறுவனங்களும் ஈடுபடுத்தப்படுகிறது. உள்ளாட்சிகளின் தகுதி மற்றும் பணியாளர்களின் தொழில்நுட்பத் திறன், எண்ணிக்கை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, செ.பெ.வ.குழுமம் உள்ளாட்சிகளுக்கு திட்ட அனுமதி (Planning Permits) வழங்க அதிகாரம் அளித்துள்ளது. சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளின் மூலமாகவே, எல்லாவித வளர்ச்சிப் பணிகளுக்கும் திட்ட அனுமதிகள் வழங்கப்படுகின்றன. மேலும் இந்த திட்ட அனுமதிகளுடன் கட்டிட உரிமங்களும் உள்ளாட்சிகளாலேயே வழங்கப்படுகின்றன.

**12.** சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான இரண்டாம் வரைவு முழுமைத்திட்டம் 2011 தயாரிக்கப்பட்டு பின் தமிழக அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது. தமிழக அரசு அவ்வரைவுத் திட்டத்திற்கு அரசாணை எண்.59, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 30–06–1995இல் இசைவு அளித்தது. பொதுமக்களின் கலந்தாலோசனைகளுக்குப் பிறகு, 1995ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒப்புதலுக்காக அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கிடையில், இத்திட்டம், நிறைவேற்றுவதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு நீதிப்பேராணை வழக்கு தொடரப்பட்டது. உயர்நீதிமன்றம், இறுதி அறிவிக்கை வெளியிடுவது குறித்து இடைக்கால தடை விதித்தது. இவ்விடைக்காலத்தடை 01–07–1997 அன்று அமலுக்கு வந்தது. சென்னை உயர்நீதி மன்றம், இந்நீதிப்பேராணை வழக்கு எண். 14819/95ன் மீது 10–07–2001 அன்று வழங்கப்பட்ட உத்திரவில், தள்ளுபடி செய்தது. பின் தமிழக அரசு அரசாணை எண். 408 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 05–10–2001இல் அவ்வரைவு முழுமைத்திட்டம் 2011ஐ சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு திருப்பி அனுப்பி, சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள நகர்ப்புற அபிவிருத்திகள், வளர்ச்சிக் கட்டுபாட்டு விதிகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள், சென்னைப் பெருநகர்ப் பகுதியின் எதிர்காலத் தேவைகள் ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு அவ்வரைவுத் திட்டத்தினை மாற்றி அமைத்து, அதனை திரும்பச் சமர்ப்பிக்குமாறு அறிவுருத்தியது.

**13.** அவ்வாறாக முழுமைத் திட்டத்தினை திருத்தியமைக்கும்போது, தற்போதைய நில பயன்பாடு வரைபடங்கள் மிகத்துல்லியமான தெளிவான செயற்கை கோள்புகைப்படங்கள் உதவியால் தயாரிக்கப் பட்டது. அதாவது 2001, 2003 மற்றும் 2004 ஆகிய வருடங்களுக்கான 1 மீட்டர் பாகுபாடு கொண்ட ஐகோனாஸ் புகைப் படங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. மேலும் 2005 ம் ஆண்டுக்குக்கான இந்திய கார்டோசாட் செயற்கைகோள் புகைப்படங்களும் பயன்படுத்தப்பட்டது. 2001 ஆண்டு எடுக்கப்பட்ட மக்கட் தொகை கணக்கெடுப்பில் உள்ள விவரங்களும் மக்கட் தொகை புள்ளிவிவரங்களும் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இது மட்டுமின்றி சென்னை பெருநகர்ப் பகுதியைச்சுற்றி தற்போது வேகமாக வளர்ந்து வந்து கொண்டிருக்கும்

தகவல் தொழில்நுட்பம் மற்றும் அத்தகைய தொழில் நுட்பத்தால் ஏற்பட்ட சேவை வளர்ச்சி, மோட்டார் வாகனம் மற்றும் அதன் துணைத் தொழிலக வளர்ச்சி, மின்னணுத்தொழிற் சாலைகளிள் வளர்ச்சி ஆகியவைகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன. 2003 ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்ட செ.பெ.வ.குழுமத்தின் உள்கட்டமைப்பு முதலீடு திட்டம் மற்றும் ஜவகர்லால் நேரு – தேசியநகர்புற புதுப்பித்தல் திட்டத்திற்காக (JN-NURM) தயாரிக்கப்பட்ட பெரு நகர் வளர்ச்சித்திட்டம் போன்றவைகளும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இந்தப் பெரும் முயற்சியில் மக்கள் நெருக்கடியை சமாளிக்க மாநகர இரயில் போக்குவரத்து (Metro Rail) மிகப்பெரிய முதலீடாகும். 2026 ல் ஏற்படக்கூடிய வளர்ச்சி மற்றும் தேவையை கருத்தில் கொண்டும் அரசின் பல துறைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற புதிய கொள்கைகள் மற்றும் திட்டங்கள், ஆகியவற்றின் அடிப்படையில் இரண்டாவது முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டது. வளர்ச்சிக்கேதுவான நிலங்கள் கண்டறியப்பட்டு அவைகளின் பரப்புகள் தொலையுணர்வு தொழில் நுட்பங்களைக் கொண்டு கணக்கிடப்பட்டன. நில அமைப்பு நிர்ப்பந்தங்களையும், நெறிப்படுத்த ஏற்படும் நிர்ப்பந்தங்களையும் கணக்கில் கொண்டு, சென்னைப் பெருநகர பகுதிக்குள் உள்ள பல உள்ளாட்சிகளுக்கு, மக்கள் தொகையும் நிலப் பயன்பாடும் விசாலமாக பகிர்ந்தளிக்கப்பட்டன. மறு ஆய்வுகளுடன் கூடிய இந்த முழுமைத் திட்டத்தின் வரைபடங்கள், கணிணிகளை அதிகமாகப் பயன்படுத்தி, டிஜிட்டல் முறையில் தயாரிக்கப்பட்டன.

14. இந்த திருத்தியமைக்கப்பட்ட இரண்டாவது வரைவு முழுமைத் திட்டம், இறுதி ஒப்புதல் அளிக்கப்படுவதற்கு முன்பு, பொது மக்களும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளும் அவர்களது ஆலோசனைகளை வழங்குவதற்கு ஒரு வாய்ப்பினை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையுடன், கடந்த டிசம்பர் 2005இல் ஒப்புதலுக்காக அரசிடம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சமர்ப்பித்தது. தமிழக அரசு, அரசாணை எண். 331ல் வீ.ப.ம.ந.வ.துறை நாள் 05–12–2006இல் இவ்வரைவு முழுமைத்திட்டத்தினை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு திருப்பி அனுப்பி, தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரகத் திட்டமிடுதல் சட்டம் 1977ன் 24(2) பிரிவின்படி, இந்த களத்தில் மேலும் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளை உட்சேர்த்து புதியதான முழுமைத்திட்டத்தினை தயாரித்து மற்றும் அக்கருத்துருவை ஒப்புதலுக்கு சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியது. இது கடந்த பிப்பரவரி 2007இல் செயல்படுத்தப்பப்பட்டது. அரசு கடந்த 30–03–2007 அன்று இசைவு அளித்தது.

15. சட்டப்படி, பொது மக்களிடமிருந்து கருத்துகளும் மற்றும் மறுப்புகளும் பெறுவதற்கு வழங்கக்கூடிய கால அவகாசம் 60 நாட்கள் மட்டுமே என்றாலும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இதற்காக 140 நாட்கள் கால அவகாசம் அளித்தது. வரைவு முழுமைத் திட்டத்தின் ஆங்கிலம் மற்றும் தமிழ் பிரதிகளும் மற்றும் இம்முழுமைத்திட்டத்தின் சுருக்கக் குறிப்புகளின் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி பெயர்ப்பு பிரதிகளும் பொது மக்களுக்காக வெளியிடப்பட்டது. மேலும் மேற்கூறப்பட்டவைகள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அலுவலக வலைதளத்திலும் www.cmdachennai.org., பொதுமக்கள் இதனை இலவசமாக பிரதி எடுத்துக் கொள்ளும் வகையில் வெளியிடப்பட்டது. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கடந்த 2007ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் ஜுலை திங்கள் வரை சென்னைப் பெருநகர்ப் பகுதியில் உள்ள 14 இடங்களில், பொதுமக்கள் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தியது. அக்கூட்டங்களில், சென்னைப் பெருநகர்ப் பகுதியில் உள்ளடக்கிய உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். கட்டிட வல்லுநர்கள் மற்றும் கட்டிடக்கலை நிபுணர்கள் போன்ற பிரதான பங்கீடுபாடு கொண்டோர் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்றது. சென்னை மாநகராட்சி மேயர் மற்றும் கவுன்சிலர்கள் மட்டும் கலந்து கொண்ட ஒரு தனிப்பட்ட ஆலோசனைக் கூட்டமும் நடைபெற்று அவர்களது ஆலோசனைகளும் பெறப்பட்டது. இவ்வாலோசனை கூட்டங்களில் ஏற்பட்ட நிகழ்வுகள் மற்றும் நடவடிக்கைகளும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுவின் வலைதளத்தில் வெளியிடப்பட்டது. இறுதியாக கடந்த 2007 ஆண்டு ஆகஸ்டு மாதத்தின் கடைசி வாரத்தில், இரண்டு நாட்கள் கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அக்கருத்தரங்கில், சம்பந்தப்பட்ட அரசு துறைகளும்/நிறுவனங்களும், இக்களத்தில் உள்ள நிபுணர்களும் மற்றும் கல்வித்துறை வல்லுனர்களும் கலந்துகொண்டு, அரிய ஆலோசானைகளை வழங்கியுள்ளனர். அரசின் தலைமைச் செயலாளர் தலைமையேற்று 31–08–2007 அன்று, நடத்திய கூட்டத்திலும் அரசின் வெவ்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் கலந்துகொண்டு, அவர்களின் கருத்துகளும்/ஆலோசனைகளும் பெறப்பட்டது.

16. 900க்கும் மேற்பட்ட, ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் அடங்கிய, கடிதங்கள் பொதுமக்களிடமிருந்தும் மற்றும் பல்வேறுபட்ட சங்கங்களிடமிருந்தும் பெறப்பட்டன. அவ்வாறான ஆட்சேபனைகளையும் ஆலோசனைகளையும் ஆய்வு செய்ய, சம்பந்தப்பட்ட பொருள் அடிப்படையிலான 7 குழுக்கள் (நிலஉபயோகம், வளர்ச்சி விதிமுறைகள், போக்குவரத்து, சுற்றுச்சூழல், குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால், திடக்கழிவு மேலாண்மை மற்றும் வீட்டுவசதி) அமைக்கப்பட்டன. இக்குழுவில் அரசுத் துறைகள்/அரசு சார்ந்த நிறுவனங்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், இந்த களத்தில் உள்ள நிபுணர்கள்/சமுதாய அடிப்படையிலான நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இடம் பெற்றிருந்தனர். இக்குழுவின் பரிந்துரைகள் 28–10–2007 அன்று நடைபெற்ற குழுமக் கூட்டத்தில், அதன் கருத்திற்காக வைக்கப்பட்டு, குழுமத்தின் முடிவுகள் இரண்டாவது முழுமைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

17. சென்னை மாநகரினை, மக்கள் வசிப்பதற்கு மிகவும் ஏற்ற, பொருளாதாரத்தில் வலுவான, சுற்றுப்புற சூழல் தூய்மையாகவும், வருங்கால சந்ததியினருக்கு நல்ல ஒரு சொத்தாக அமையப் பெற்ற ஒரு பிரதான பெருநகரமாக மாற்றுவதே சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் நோக்காகும்.

18. அடுத்த பத்தாண்டுகளில், சென்னைப் பெருநகர் 1 கோடிக்கு மேல் மக்கள் தொகை கொண்ட, உலகின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றாக விளங்கும் என எதிர்பாக்கப்படுகிறது. 176 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள சென்னை மாநகராட்சி, வரும் 2026–ஆம் ஆண்டில், சுமார் 59 இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்கியும், அதே சமயம், 1013 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள இதர பெருநகர்ப்பகுதி சுமார் 66 இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்கியும் இருக்கும் என எதிர்பாக்கப்படுகிறது. ஒரு சமச்சீரான மற்றும் திட்டமிட்ட மேம்பாடுகளுக்கு ஒரு பன்னோக்கு அணுகு முறையை நடைமுறைப்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதில், நிலப்பயன்பாடு மற்றும் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு முறைகள் மூலமான அபிவிருத்தி ஒழுங்குமுறைகள், நெரிசல் மிகுந்த இடங்களிலிருந்து ஒரு சில போக்குவரவு மிகுந்த மொத்த விற்பனை செயல்பாடுகளை திட்டமிட்ட பகுதிகளுக்கு இடமாற்றம் செய்வது போன்ற நெரிசலைக் குறைக்கும் நடவடிக்கைகளும், புதிய நகரங்கள்/துணை நகரங்கள் உருவாக்குதல் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மூலம், ஒருங்கிணைந்த நகர்ப்புற உள்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களை உருவாக்குவதும் மற்றும் செயல்படுத்துவதும் அடங்கும்.

19. சென்னை நகரமானது, அதனைச் சுற்றியுள்ள மண்டலங்களின் மையமாக திகழ்கிறது. திட்டமிடுதலுக்கு ஏதுவாக, இப்பகுதியில் மண்டலம் ஏதும் அறிவிக்கப்படவில்லை. 1975ஆம் ஆண்டில் எல்லைகள் வரையறைக்கப்பட்ட பெருநகர்ப் பகுதியே, மண்டலமாக அறிவிக்கப்பட்டு, திட்டமிடுதல் நடவடிக்கைகளை வரையறை செய்தது. எனினும், கேளம்பாக்கம்–திருப்போரூர், ஒரகடம்–திருப்பெரும்புதூர் மற்றும் கும்மிடிபூண்டி–பொன்னேரி ஆகிய பகுதிகளில் வந்து கொண்டிருக்கும் வளர்ச்சிகளை கருத்திற்கொண்டு, ஒரு மண்டலத் திட்டத்தினை உருவாக்குவதற்கு, சென்னைப் பெருநகர்ப் பகுதியை ஒட்டியுள்ள திருவள்ளூர் மற்றும் காஞ்சீபுரம் மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளையும் ஒன்றிணைத்து ஒரு மண்டலமாக அறிவிக்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அவ்வாறு ஒரு பரந்த விரிந்த மண்டலத்திட்டம் உருவாக்கப்படும்போது, அம்மண்டலத்தில் சமச்சீரான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு, சென்னைப் பெருநகர்ப் பகுதியின் முழுமைத் திட்டமும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.